# யா/ ஏழாலை வடக்கு
# அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை

# பரிசளிப்பு விழா
# PRIZE GIVING 2016

## அதிபர் அறிக்கை
## Principal's Report
17.11.2016

யா/ ஏழாலை வடக்கு

அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2016

காலம்: 17.11.2016 வியாழன் பிற்பகல் - 01.31 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

தலைவர்: திரு. ஆ. சிறிதரன் J.P (அதிபர்)

பிரதம விருந்தினர்

உயர்திரு சிதம்பரம் கந்தசாமி

(ஓய்வுநிலை, பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

◆◆◆

சிறப்பு விருந்தினர்

உயர்திரு. சுப்பையா சண்முககுலகுமாரன்

(ஓய்வுநிலை, கோட்டக்கல்விப் பணிப்பாளர் உடுவில்)

◆◆◆

நிறுவுனர் பேருரை

செல்வி. உதயகலா சிவபாதசுந்தரம்

(உதவி முகாமையாளர், மாகாண உள சமூக வள நிலையம்)

◆◆◆

கௌரவ விருந்தினர்

திருமதி. சசிகலா தினேஸ்

(கிராம அலுவலர், J/205 ஏழாலை வடக்கு)

**தங்கள் வரவு எங்களை மகிழ்விக்கும்**

பாடசாலைச்சமூகம்

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்து வரல்
- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- கிறீஸ்தவ கீதம்
- தேசியக்கொடி ஏற்றல் - தேசிய கீதம்
- பாடசாலைக்கொடி ஏற்றல் - பாடசாலைக்கீதம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- நிறுவுனர் பேருரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- நன்றியுரை
- கலைநிகழ்ச்சிகள்
- கொடி இறக்கல்



# பாடசாலைச் சின்னம்

## நோக்கக் கூற்று

கற்றல் கற்பித்தல் செயலாற்றுகை மூலமாக மாறிவரும் உலகுக்குப் பொருத்தமானதும், சவால்களை எதிர்கொள்ளக்கூடியதும், பண்பாட்டைப் பேணுவதுமான நற்பிரசைகளை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று

எமது பாடசாலையின் பாரம்பரியமான சாதனைகள் தற்போதைய வினையாற்றல் திறன்களினூடாக, முறைசார், முறைசாரா, முறையில் கல்வி மூலம் மாணவர்களுக்குக் கல்வி - தொழில் தேர்ச்சிகளை வழங்குதல் அவர்களைத் தேசக் கட்டுமானத்தில் உண்மையான பங்காளராக்கி வீடு, பாடசாலை, நாட்டுப்பற்றுடன் செயலாற்றக்கூடிய கல்விச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

# அதிபர் அறிக்கை

இன்றைய இவ் இனிய நன்நாளிலே எம் அனைவருக்கும் அருள் பாலிக்கிற கருணைமிகு ஏழாலை வடக்கு திருவாலங்காட்டு ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து பாடசாலைக்கு அருகில் அமர்ந்து அருள் பரப்பும் அன்னை காளியின் துணை வேண்டி வணங்கி இவ்வூர் மக்கள் கல்வி அறிவில் உயர்வு பெற வேண்டும் என்ற நன்நோக்குடன் இப்பாடசாலையை அமெரிக்கன் மிஷனறியின் உதவியுடன் ஆரம்பித்த இவ்வூர்ப்பெருந்தகை அமரர். உயர்திரு சீனிவாசகம் அவர்களையும் நினைவு கூர்ந்து 128வது ஆண்டு அதிபர் அறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து எம்மை பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு. சிதம்பரம் கந்தசாமி (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்) அவர்களே, ஆசியுரை நிகழ்த்தி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ ச. பிரணதார்த்திகரசர்மா (ஓய்வுநிலை உப அதிபர், ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) அவர்களே, நினைவுப்பேருரை நிகழ்த்த வந்திருக்கும் செல்வி உதயகலா சிவபாதசுந்தரம் (உதவி முகாமையாளர் மாகாண உள சமூக வள நிலையம்) அவர்களே ஏழாலை வடக்கு கிராம அலுவலர் திருமதி. சசிகலா தினேஸ் அவர்களே அயற் பாடசாலை அதிபர்களே, அயற் பாடசாலை ஆசிரியர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, பழைய மாணவர்களே என்னோடு தோளோடு தோள் நின்று செயற்படும் எமது பாடசாலை ஆசிரியர்களே எனதருமை மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து கலந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் எமது அன்பிற்கும் பண்பிற்கும் மரியாதைக்கும் உரிய உயர்திரு சிதம்பரம் கந்தசாமி அவர்கள் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தமது வேலைகளைத் தள்ளி வைத்து எம்மைப் பெருமைப்படுத்தும் வகையில் வருகை தந்தமைக்கு உயர்திரு சிதம்பரம் கந்தசாமி அவர்களை நன்றியுடன் வரவேற்கின்றேன்.

இவர் தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் வலிகாமத்தில் காலூன்றி அமைதியாக வாழ்ந்து வருகிறார். கல்வித்துறையில் பட்டதாரி ஆசிரியராக களம் புகுந்து பின் அதிபராக நீண்டகாலம் சேவையாற்றி சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தின் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து வலிகாமம் கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்திக்கு பிரதிக்கல்விப்பணிப்பாளராக நிறைவான பணியாற்றி இன்று ஓய்வுநிலையில் தமது குடும்பத்துடன் அமைதியாக வாழ்ந்து வருகிறார். இவர் எமது விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்தமைக்கு பெருமகிழ்வு அடைகிறோம்.

இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உயர்திரு சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்களை நன்றியுடன் வரவேற்கின்றேன். இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் விஞ்ஞான ஆசிரியராக கல்வியுலகில் இரட்டையரில் ஒருவராக புகுந்து அதிபராக கோட்டக்கல்விப் பணிப்பாளராக பல பதவியுயர்வுகள் பெற்று இன்று ஓய்வுநிலையில் தமது குடும்பத்தினருடன் சிறப்பாக வாழ்ந்து வருகிறார். அவர் எமது உடுவில் கல்விக்கோட்டத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய காலப்பகுதியில் நேரம் பொன்னானது என்பதை தமது ஒவ்வொரு செயற்பாட்டிலும் செய்து காட்டியவர். தமது 37 வருட சேவையை பூர்த்தி செய்து சமீபத்தில் ஓய்வு பெற்றார். அவர் எமது விழாவிற்கு வருகை தந்தது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

நினைவுப் பேருரை நிகழ்த்த வருகை தந்து அமர்ந்திருக்கும் செல்வி. உதயகலா சிவபாதசுந்தரம் (உதவி முகாமையாளர் மாகாண சமூக வள நிலையம்) நன்றியுடன் வரவேற்கிறேன். அவர் என்னுடன் ஒரே வருடத்தில் (1985) முதல் நியமனம் களுத்துறை மாவட்டத்தில் பெற்று எனது பாடசாலைக்கு அண்மையிலுள்ள பாடசாலையில் கற்பித்தார். யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயத்தில் ஆசிரியராக பின் உப அதிபராக கடமையாற்றினார். தனது விடாமுயற்சி காரணமாக பட்டம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா, Med. போன்ற பட்டங்களைப் பெற்று மாணவரின் உள சமூகத்தில் நாட்டம் கொண்டு இன்று மாகாண சமூகவள நிலையத்தில் உதவி முகாமையாளராக பணியாற்றி வருகின்றார். அவரின் வருகையை நாம் மனமாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலைக்கு வேண்டும் உதவிகளைச் செய்யக் காத்திருக்கும் கௌரவ விருந்தினராக வந்தமர்ந்து கலந்து கொள்ளும் ஏழாலை வடக்கு கிராம அலுவலர் திருமதி சசிகலா தினேஸ் அவர்களை மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

எமது பாடசாலையின் உப அதிபராகவும் தரம் 1, 2இன் வகுப்பாசிரி யராகவும் செயற்படும் திருமதி. ப.அ.ஜோ. விக்னராஜா அவர்கள் மாணவரின் ஒழுக்கம், சுத்தம், மாணவர் வரவு என்பவற்றை சிறப்பாக கவனித்து வருகின்றார். தரம் 3இன் வகுப்பாசிரியராக திருமதி டோ. கல்கி அவர்கள் மாணவரது சிறப்பாக சுத்தம், மாணவர் வரவு என்பவற்றை சிறப்பாக கவனித்து வருகின்றார். தரம் 4இன் வகுப்பாசிரியராக நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றத்தில் வருகை தந்த திருமதி. எ. கற்பகவதனம் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

தரம் 5இன் வகுப்பாசிரியராகச் செயற்படும் திரு. சோ. சபாபதிசர்மா அவர்கள் சமய நிகழ்வுகளை செவ்வனே சிறப்பாகச் செய்து வருவதோடு அலுவலக கணினி மூலமான சகல செயற்பாடுகளையும் செய்து உதவி வருகின்றார். சமய நிகழ்ச்சிகளை முன்னின்று செயற்படுத்துவதுடன் எல்லோரையும் முழுமையாக ஈடுபட செய்கின்றார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை உரிய முறையில் கற்பித்து வருகின்றார். தரம் 5இல் இம்முறை 17 மாணவர்கள் தோற்றி 16 மாணவர்கள் 80 புள்ளிகளுக்கு மேல் பெற வைத்த பெருமை ஆசிரியர் சோ. சபாபதிசர்மா அவர்களையே சாரும்.

## பாடசாலையில் இக்காலப்பகுதியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

❖ 18.11.2015 இப்பாடசாலையின் பழைய மாணவி செல்வி. நா. துசியந்தினி (டென்மார்க்) அவர்கள் அலுவலகத்திற்கு மின்விசிறி மற்றும் போட்டோப்பிரதி இயந்திரம் திருத்தம், ரோணர், மின்மாணி பொருத்துதல் மற்றும் பூட்டுக்கூலிகள்
ஆக ரூபா 20,000/= செலுத்தி உதவினார். அவருக்கு எனது நன்றிகள்.

❖ 14.01.2016இல் தரம் 1இற்கான கால்கோள்விழா நடைபெற்றது. இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திருமதி. க. மோகனசுந்தரம் ISA அவர்கள் கலந்து சிறப்பித்தார். அவர்கள் தரம் 1 மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார். அன்றைய தினமே பாடசாலையில் தைப்பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சகலவிதமான உதவிகளையும் வழங்கியவர்களுக்கு எனது நன்றிகள்.

❖ 21.01.2016 இல் தரம் - 3 மாணவர்களின் மகிழ்ச்சிகரமான ஆரம்பம் கண்காட்சி நடைபெற்றது. அதனை எமது பெற்றோர்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். இதனை நெறிப்படுத்தியவர் தரம் - 3 வகுப்பாசிரியர் திருமதி. டோ. கல்கி அவரைப் பாராட்டுகின்றேன்.

❖ 10.02.2016 இல் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ பா. கஜதீபன் (வடக்கு மாகாண சபை உறுப்பினர்) அவர்களும், சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக்கோட்ட பணிப்பாளர் உயர்திரு சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களான திரு. ந. சுப்பிரமணியம் (ஓய்வுநிலை அதிபர் மல்லாகம் மகாவித்தியாலயம்) அவர்களும் ஏழாலை வடக்கு கிராம அலுவலர் செல்வி. சசிகலா தினேஸ் அவர்களும் ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம் திருமதி. க. மோகனசுந்தரம் அவர்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

❖ 10.02.2016 லண்டனைச் சேர்ந்த திருமதி நல்லநாதன் றெஜினா கனடாவைச் சேர்ந்த திருமதி. கோபாலகிருஷ்ணன் கல்பனா ஆகியோர் இணைந்து பாடசாலைக்கு 20 பிளாஸ்ரிக் கதிரைகளும் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதற்கு 65 பிளாஸ்ரிக் உண்டியல்களும் 10 சிறிய வெற்றிக் கிண்ணங்களும் SDS உறுப்பினர்களான திருமதி. தமிழ்வாணி மயூரன், திருமதி. கனிஸ்ரா பகீரதன் ஆகியோர் மூலம் பாடசாலைக்கு கிடைக்க உதவினார்கள். அவர்களை இவ்வேளையில் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

❖ 08.03.2016 கனடாவில் வசிக்கும் ஏழாலையைச் சேர்ந்த திரு. செல்லையா சிவபாதம் அவர்கள் மாணவரின் கற்றலுக்கு பயன்படும் இரண்டு சிறிய நுணுக்குக்காட்டிகளை திரு. க. மன்மதன் அவர்கள் மூலம் பாடசாலைக்கு கிடைக்க வழி செய்தார். அவரையும் இவ்வேளை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

❖ 05.05.2016 அமரர். கந்தப்பிள்ளை சின்னம்மா ஞாபகார்த்தமாக அவரது பேரப்பிள்ளைகளான திருமதி. குலேந்திரன் குலேந்திரா, திருமதி. றோய் றோசா, திருமதி. சந்திரன் சாந்தா, திருமதி. றாயன் றயனா ஆகியோர் எமது பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைச்சின்னம் பொறித்த புத்தகப்பையை திருமதி. சந்திரன் சாந்தா, திருமதி. றாயன் றயனா ஆகியோர் நேரில் வருகை தந்து மாணவர்களுக்கு

அன்பளிப்புச் செய்தார்கள். அவர்களுக்கு எனது நன்றிகள். அவ்வேளை ஏழாலை வடக்கு முன்னேற்றக்கழக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

❖ 20.07.2016 பாடசாலையின் சிறுவர் முற்றம் அமைந்த பகுதி மிகவும் பள்ளமாக காணப்பட்டது இதற்கு கிறேசர் மண்ணை போட்டு நிரவ உதவிய செல்வராசா முரளிதரன் (நோர்வே) அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் பாடசாலை அழகுபடுத்தும் நோக்கில் எமது ஆசிரியர் திரு. சோ. சபாபதிசர்மா அவர்கள் 7 கமுகங்கன்றுகளை தந்தார் அவை பாதையோரமாக வைக்கப்பட்டுள்ளது. அவருக்கும் எனது நன்றிகள். தொடர்ந்து 20 கமுகங்கன்றுகளும் 4 மாங்கன்றுகளும், 4 ஜம்புநாவல் கன்றுகளும் அன்பளிப்புச் செய்து திரு. மன்னன் அவர்களுக்கும் அதனை பாடசாலை வளவினில நாட்டுவதற்கு உதவிய SDS செயலாளர் திருமதி. சி. சியாமினி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

❖ 01.10.2016 சர்வதேச சிறுவர் தினம் பாடசாலை மட்டத்தில் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களால் மாணவருக்கு சிற்றுண்டி தேனீர் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

❖ 06.10.2016 எமது பாடசாலையில் சர்வதேச ஆசிரியர்தினம் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களால் கொண்டாடப்பட்டது. இறுதியில் மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

❖ 11.10.2016 விஜயதசமி தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சரஸ்வதி பூசை தினம் ஒன்பது நாட்களும் பெற்றார்கள் பூசைக்குரிய சகல ஆயத்தங்களையும் செய்து மாணவர்களுக்கும் பிரசாதம் வழங்கினார்கள்.

❖ 08.11.2016 பாடசாலை நடைபாதைக்கு கல் பதித்து அழகுபடுத்த உதவிய திருமதி. நோணா, திரு. மன்னன், திரு. ஜெயக்குமார், திரு. செவ்வேள், திரு. ரவி, திரு. அரசலிங்கம், திருமதி. அருந்ததி, திருமதி. அகல்யா, திருமதி. அனுசியா, திரு. அருள், திரு. மோகன், திரு. பகீர், திரு. தீபன், திருமதி. செல்வி ஆகியோருக்கு எனது நன்றிகள். அத்தோடு பாடசாலைச் சூழலையும் சுத்தம் செய்ய உதவினார்கள். இதனை SDS செயலாளர் திருமதி. சி. சியாமினி அவர்கள் ஒழுங்குபடுத்தி செயற்படுத்தினார். அவருக்கும் எனது நன்றிகள்.

❖ தேசிய வேலைத்திட்டம் 2016

தேசிய கல்வி அமைச்சர் கௌரவ அகிலவிராஜ் காரியவாசகம் அவர்களின் வழிகாட்டலில் மனிதநேயம், பண்பு, அறிவு, வலு நிறைந்த மாணவ சந்ததியை உருவாக்கும் பொருட்டு மாகாணக்கல்வி அமைச்சுடன் இணைந்து "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" NSBS வேலைத்திட்டத்தின் மூலமாக அபிவிருத்தி செய்ய ஒதுக்கப்பட்ட நிதி விபரம்

சிறு திருத்தம் - 0.28 மில்லியன்
ஆசிரியர்களுக்கான சகல
வசதிகளுடனான மலசல கூடம் - 0.696 மில்லியன்

❖ இடமாற்றம் பெற்ற ஆசிரியர்

எமது பாடசாலையில் 7 வருடங்கள் கடமையாற்றி முடிந்ததன் காரணமாக திருமதி. கலைவாணி நகுலேஸ்வரன் அவர்கள் யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டடுள்ளார். இவரது சேவை சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## மாணவருக்கான மதிய உணவு

மாணவரது உணவுத் தேவைக்கான உணவுப்பொருட்களை உலக உணவுத்திட்டம் வழங்கி வருகின்றது. கல்வி அமைச்சு பச்சை மரக்கறிக்குரிய கொடுப்பனவையும் வழங்குகிறது. மேலும் மரக்கறித் தேவையையும் விறகுத் தேவையையும் ஓரளவு பெற்றோர் நிவர்த்தி செய்கின்றனர். இதற்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. ப. அ. ஜோ. விக்னராஜா அவர்களும் இத்திட்டம் சிறப்பாக செயற்பட உதவுகின்றனர். இவருக்கு உதவியாக ஆசிரியை திருமதி. எ. கற்பகவதனம் அவர்களும் செயற்படுகின்றார்.

## விளையாட்டு விழா

வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாடப்படும் பெருவிழாவில் விளையாட்டு விழாவும் ஒன்றாகும். இவ்விழா மாணவரது உடல் வளர்ச்சி, ஆளுமை விருத்தி, தலைமைத்துவப்பண்பு போன்றவற்றை வளர்க்கப் பயன்படுகின்ற விழாவாகும். இதன் மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் குடும்ப மட்டம், கோட்டமட்ட, வலயமட்ட, மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்ற வழி பிறக்கும். இவ் விளையாட்டுக்குழுவின் செயலாளராக திருமதி. டோ. கல்கி அவர்கள் சிறப்பாகச் செயலாற்றுகின்றார்.

## இந்து மன்றம்

இம்மன்றம் பொங்கல் விழா, சித்திரைப்புத்தாண்டு, நவராத்திரிவிழா என்பவற்றை சிறப்பாகச் செய்து வருகின்றது. இதன் பொறுப்பாசிரியராக ஆசிரியர் திரு. சோ. சபாபதி சர்மா அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இம் மன்றச் செயற்பாடுகள் சிறப்பாக வருவதை இட்டு மகிழ்வடைகின்றேன்.

## கிறிஸ்தவ மன்றம்

இம்மன்றமானது ஒவ்வொரு வருடமும் ஒளிவிழாவை சிறப்பாகக் கொண்டாட தென்னிந்தியத்திருச்சபையினர் (கடந்த வருடம் ரூபா. 10,000) நிதியுதவியை வழங்கி வருகின்றனர். அவர்களுக்கு எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றி கூறுகிறேன். அந் நிதியைக்கொண்டு ஒளிவிழாவை சிறப்பாக நடாத்தி வருகின்றோம். இதற்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. ப.அ.ஜோ. விக்னராஜா அவர்களும் அவருடன் இணைந்து ஆசிரியை திருமதி. டோ. கல்கி செயற்பட்டு வருகின்றனர்.

## விசேட கல்வி

இதற்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. ப.அ.ஜோ. விக்னராஜா அவர்கள் செயற்பட்டு வருகின்றார். குடும்ப மட்ட, கோட்ட மட்ட, வலய மட்ட போட்டிகளில் மாணவர்களை பங்குபற்ற வைத்து வெற்றி வாகை சூடி வருகின்றார்.

## கட்டாயக் கல்விக்குழு

எமது பாடசாலையின் கட்டாயக் கல்விக்குழு நல்ல முறையில் இயங்கி வருகின்றது. வரவு குறைந்த மாணவரை இனங்கண்டு ஒழுங்கான வரவைப் பேணி வருகின்றது. இதற்கு ஆசிரியை திருமதி. டோ. கல்கி அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்படுகின்றார். பெற்றோரும் சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்தனர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## வழிகாட்டலும் ஆலோசனையும்

வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பாசிரியராக திருமதி. டோ. கல்கி அவர்கள் மாணவர்களுடன் அன்பாகப் பழகி சிறந்த முறையில் ஆலோசனை வழங்கி வழிகாட்டுகின்றார்.

## நன்றிக்குரியவர்கள்

இன்றைய நன்நாளில் நெருக்கடியான வேலைகள் மத்தியிலும் எம்மை கௌரவப்படுத்தும் நோக்கில் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உயர்திரு சிதம்பரம் கந்தசாமி (ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய பிரம்மஸ்ரீ ச. பிரணதார்த்திகரசர்மா(ஓய்வு நிலை உப அதிபர் யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) அவர்களுக்கும் நினைவுப்பேருரை ஆற்றி அமர்ந்திருக்கும் செல்வி . உதயகலா சிவபாதசுந்தரம் (உதவி முகாமையாளர் மாகாண சமூக வள நிலையம்) அவர்களுக்கும் கிராம அலுவலர் திருமதி. சசிகலா தினேஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றேன். அத்துடன் வருகை தந்து எம்மை மகிழ்வித்த அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இவ் அதிபர் அறிக்கையை சிறந்த முறையில் பதித்துத் தந்த சுன்னாகம் கிருஸ்ணா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாடசாலைக்கு தேவையான பௌதீகவள தேவையை நிறைவு செய்யும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஏழாலை வடக்கு மக்களுக்கும் எமது நன்றிகள். பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டின்போது ஆலோசனையும், உதவியும் வழங்கும் திரு. க. நித்தியானந்தம், திரு. நா. செல்வராசா, திரு. த. நிறோஜன், திரு. அ. தவப்பிரகாசம் அவர்களுக்கும் எனது நன்றிகள். எமது பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கு உதவி புரிகின்ற வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றிகள். ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு விழாவிற்கு நிதியுதவி புரியும் ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தினருக்கும், சுன்னாகம் மக்கள் வங்கியினருக்கும் தந்துதவும் எமது நன்றிகள். பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைக் கூறி எனது அதிபர் அறிக்கையினை நிறைவு செய்கிறேன்.

**தேவைகள்**

1. ஆங்கில ஆசிரியர்
2. OHP
3. கணனிகள்
4. கணனி அறை
5. அதிபர் அலுவலகம்
6. சுற்றுமதில்

# பாடசாலை தகவல்கள்

| | | |
|---|---|---|
| பாடசாலை ஆரம்பம் | - | 11.10.1888 |
| பாடசாலை இலக்கம் | - | 1010015 |
| தொகை மதிப்பு இல | - | 09191 |
| பரீட்சை இல | - | 11076 |
| தேர்தல் தொகுதி | - | மானிப்பாய் |
| பிரதேச செயலர் பிரிவு | - | வலி. தெற்கு (உடுவில்) |
| கிராம அலுவலர் பிரிவு | - | ஏழாலை வடக்கு J/ 205 |
| பாடசாலைத்தரம் | - | வகை III |
| வகுப்புகள் | - | 1 - 5 வரை |
| காணி | - | 9 1/2 பரப்பு 3 குழி |
| கட்டிடம் | - | 110'x20'(20x10 அலுவலகம்) |
| மின்சார வசதி | - | உண்டு |
| குடிநீர் வசதி | - | உண்டு நீர்த்தாங்கி |
| அரசால் சுவீகரிக்கப்பட்டது | - | 10.04.1963 |
| இடம்பெயர்ந்தது | - | 07.01.1991 |
| இயங்கிய இடம் | - | யாழ்/ ஏழாலை புனித இசிதோர் றோ.க பாடசாலை |
| மீள் திறப்பு | - | 14.02.2003 |
| கற்றல் நடவடிக்கை ஆரம்பம் | - | 01.01.2004 |
| முகவரி | - | ஏழாலை வடக்கு |
| மின் அஞ்சல் முகவரி | - | earlalainorthamtms@gmail.com |
| சமையல் கூடம் | - | 20'x10' |

# எமது பாடசாலையின் ஆளணியினர்

| | |
|---|---|
| திரு. ஆ. சிறிதரன் | SLPS 2 II அதிபர் |
| திருமதி. ப.அ.யோ. விக்னராஜா | SLTS 2 II ஆசிரியர் |
| திருமதி. டோ. கல்கி | SLTS 2 II ஆசிரியர் |
| திரு. சோ. சபாபதிசர்மா | SLTS 2 II ஆசிரியர் |
| திருமதி. எ. கற்பகவதனம் | SLTS 3 I ஆசிரியர் |
| திருமதி. இ. துர்க்கா | (தொண்டர் ஆசிரியர்) |

## அபிவிருத்திக்குழு

திரு. ஆ. சிறிதரன் (தலைவர்)

திருமதி. சி. சியாமினி (செயலாளர்)

திரு. சோ. சபாபதிசர்மா (பொருளாளர்)

திருமதி. பாரதி சிவன்சேய் (வலயப்பிரதிநிதி)

திருமதி. கனிஸ்ரா பகீரதன்

திருமதி. ப. அ. ஜோ. விக்னராஜா

திருமதி. த. மயூரன்

திருமதி. ந. கேதீஸ்வரன்

திரு. அ. தவப்பிரகாசம்

செல்வன். வி. பிரணவன்

## தொழில்நுட்பக் குழு

திரு. திரு. ஆ. சிறிதரன்

திரு. சோ. சபாபதிசர்மா

திருமதி. கனிஸ்ரா பகீரதன்

திரு. நா. செல்வராஜா

திரு. க. நித்தியானந்தன்

திரு. த. நிறோஜன்

## அன்பளிப்புச் செய்தோர்

| | |
|---|---|
| துர்க்கா தேவஸ்தானம் | 5000/= |
| மக்கள் வங்கி | 2500/= |
| திருமதி. பார்வதி தேவி மகேஸ்வரன் | 1500/= |

ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு விழாவிற்கு நிதியுதவி புரியும் ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தினருக்கும், சுன்னாகம் மக்கள் வங்கியினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

# கற்பித்த ஆசிரியர்கள்

திரு. இராசா
திரு. ஞானம்
திரு. அம்பலம்
திரு. திசநாயகம்
திரு. செல்வம்
திரு. செல்லப்பா இரத்தினம்
திருமதி. M. மனோன்மணி
திரு. பண்டிதர் பொன்னுத்துரை
திரு. கந்தையா
திருமதி. பாக்கியம் இராசதுரை
திரு. சூசைதாஸ்
திரு. வசந்தராசபிள்ளை
திருமதி. சகுந்தலா
திருமதி. ப. இராசையா
திருமதி. கதிராசிப்பிள்ளை
திருமதி. றோஸ் செபரட்ணம்
திரு. ரி. கந்தையா
திரு. S. இரத்தினம்
திரு. S.R. இரத்தினசிங்கம்
திரு. V.S. வைரமுத்து
திருமதி. K. அன்னதானம்
திரு. திருநாவுக்கரசு (நாவேந்தன்)
திரு. வி. முருகேசு
திரு. ஜோன் துரைராசா (1995)
திருமதி. இராசசிங்கம் இராசமணி
திருமதி. தேவராசா புஸ்பராணி
திரு. தி. இரவீந்திரநாதன்
திருமதி. T. உருத்திரலிங்கம்
திருமதி. சுகிர்தம் தயானந்தம்
திருமதி. பா. சிவராஜசிங்கம்
திருமதி. ஞானதீபம் அருட்பிரகாசம்

திருமதி. கொ. தேவதாசன்
திருமதி. லில்லிமலர் சண்முகநாதன்
திருமதி. N. கணேசராசா
திருமதி. நாகம்மா யோகர்
திரு. பொ. பாலநாதன்
திரு. அ. அருட்பிரகாசம்
திருமதி. ஏ. பரமானந்தன்
திருமதி. அன்னலட்சுமி பொன்னுச்சாமி
திரு. L.G. சண்முகநாதன்
திருமதி. V. கந்தசாமி
திரு. M.S. தயானந்தன்
திருமதி. குலமணி பொன்னுத்துரை
திரு. ப. கந்தசாமி
திருமதி. இரஞ்சிதம் சுவாமிநாதன்
செல்வி. R. இராசலிங்கம்
திரு. ஏ. சின்னத்தம்பி
திரு. K. சின்னப்பா
திரு. ரி. பொன்னையா
திரு. ம. இராசேந்திரம்
திருமதி. தவமணி சின்னத்தம்பி
திரு. ச. பொன்னம்பலம்
திரு. அப்புத்துரை
திரு. கார்த்திகேசு
திருமதி. முத்துச்சாமி செல்லம்மா
2003 மீள் திறப்பிற்குப் பின்
திருமதி. சுஜந்தினி குருபரன்
திருமதி. கௌசலா சிவசுதன்
திரு. செபஸ்தியாம்பிள்ளை யூட் ரவிநாத்
திரு. பரமலிங்கம் அருமைநாதன்
திரு. அ. வினோராஜ்
திருமதி. கலைவாணி நகுலேஸ்வரன்



திருமதி F.A.G. விக்னராஜா


# அதிபர் வரிசை

1. திரு. சீனிவாசம் (சீனிச்சட்டம்பியார்)
2. திரு. கார்த்திகேசு 1931
3. திரு. தம்பிஐயா 1967 - 1968
4. திரு. வயித்திலிங்கம் 1949
5. திரு. செல்லையா 1965
6. திரு. விஜயரட்ணம் 1970
7. திரு. சின்னத்துரை
8. திரு. சரவணமுத்து
9. திரு. செ. சோமலிங்கம்
10. திரு. சூசைப்பிள்ளை
11. திரு. யோகர் 1976 - 1993
12. திரு. பொன்னம்பலம் 1993 - 1995
13. திரு. த. வாமதேவன் 2003 - 2013
14. திரு. ஆ. சிறிதரன் (J.P) 21.03.2013 இன்று வரை

இப்பாடசாலை 11.10.1988ம் ஆண்டு கல்விமான் உயர்திரு சீனிவாசகம் (சீனிச்சட்டம்பியார்) அவர்களை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து யா/ ஏழாலை இசிதோர் றோ.க.த.க தமிழ்க்கலவன் பாடசாலையில் சிறிது காலம் இயங்கி பின் தற்காலிகமாக மூடப்பட்டு இருந்தது.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய உயர்திரு தற்பரானந்தன் அவர்களும் இவ் ஊர் பெருமகன் சி. கந்தசாமி அவர்களினதும் உந்துதலின் காரணமாக இப்பாடசாலையை அப்போதைய வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்களினதும் அப்போதைய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சு. சுந்தரசிவம் அவர்களினதும் மேற்பார்வையில் GTZ நிறுவனத்தின் அனுசரணையுடன் கட்டிடங்கள் கட்டப்பட்டு மீளத்திறக்கப்பட்டது.

## பாடசாலை அபிவிருத்திச் சபை




## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



## பாடசாலை ஆசிரியர்கள்



## பாடசாலை தொழில்நுட்பக் குழு



# பிள்ளையின் சுயமரியாதையை உயர்த்துவதற்கு உதவும் பெற்றோரின் அணுகுமுறைகள்

சுயமரியாதை என்பது வெற்றிகரமான அல்லது சந்தோசமான வாழ்க்கையின் மூலப்பொருள் ஆகும். ஒரு பிள்ளையிடம் பலவற்றைப் புத்திசாலித்தனமும் திறனும், ஆற்றல்களும் இருக்கலாம். ஆனால், சுயமரியாதை இல்லை எனின் மனிதர்களுடனான உறவு, தொழில்நிலை, நாளாந்த வாழ்க்கை ஆகிய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வெற்றி பெறுவது சாத்தியமற்றது ஆகிவிடும்.

பிள்ளையின் ஆரம்ப கால வாழ்க்கையிலேயே நேர்மறையான சுயமரியாதை கட்டியெழுப்பப்படுவது அவசியமாகும். பெற்றோர்களே இதற்கு அடித்தளம் இடவேண்டும். பிள்ளை காண்கின்ற, கேட்கின்ற, அல்லது நினைக்கின்ற எல்லாவற்றையும் எம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், பிள்ளைகளின் சுயவிம்பத்தை அல்லது படத்தை உருவாக்குவதில் எம்மால் பங்களிப்புச் செய்ய முடியும். இறைவன் எமக்கு இதனை ஒரு ஒரு சிறப்புப் பரிசாகக் கொடுத்துள்ளார்.

ஒரு பிள்ளை பிறக்கின்ற போது அதன் மனம் ஒரு தூய்மையான தட்டாகவே எம்மிடம் வருகின்றது அவ்வாறு வருகின்ற போது, ஆரம்ப காலங்களில் நாம் நடந்து கொள்ளும் முறைகளின் ஒவ்வொரு அம்சமும் அத்தட்டில் பதிந்து விடும். அவை வஓவ்வொன்றும் பிள்ளையின் மனதில் சென்று பதிந்து எளிதில் அப்பிள்ளையின் சுயத்தைப் பாதித்து விடும்.

நாம் பிள்ளையிடம் சிறந்த பழக்க வழக்கங்களையும், விசேட ஆற்றல்களையும், திறன்களையும் கொண்ட நேரான பல நல்ல விடயங்களை எதிர்பார்க்கின்றோம். அவற்றைப் பிள்ளை கடைப்பிடிக்க வேண்டுமாயின் பெற்றோரும் பிள்ளையிடம் பழகுகின்ற அனைவரும் தமது நடத்தையில் அவற்றைக் கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். பிள்ளையின் சுயத்தை உருவாக்குவதில் இவை மிகவும் செல்வாக்குச் செலுத்தும்.

எனவே, பிள்ளை சுயமாகவே, தன்னைப்பற்றிய பல சாதகமான விஷயங்களை அத்தட்டில் சேமிக்கத் தொடங்கும். இவ்வாறு சேமிப்பதற்குப் பெற்றோர் திரும்பத் திரும்ப, சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்க வேண்டும். இவ்வாறு பிள்ளைகள் மனதில் சேமிப்பது "சுயமரியாதை வங்கிக் கணக்கு - **Self esteem bank account**" ஆகும். எந்தப் பிள்ளையும் சுயமாக நேர்மறையான எண்ணங்களை அதனுள் சேமிக்க வேண்டும். வர இருக்கும் தசாப்தங்களில்

இந்த வங்கிக் கணக்கில் தவிர்க்க முடியாத மறையான எண்ணங்கள் சேமிக்கப்பட்டால், அவற்றை ஆராய்ந்து, வெளியேற்றி அக்கணக்கைச் சமப்படுத்த வேண்டும். இவ்வாறு, பிள்ளையினால் உருவாக்கப்பட்ட அவ்வங்கிக் கணக்கில் நேர்மறையான வரவு உயர்வதற்குப் பெற்றோராகிய நாம் "எப்படி அறக்கொடையை வழங்க முடியும்? பிள்ளையின் சுயமரியாதையைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்ய முடியும்?" என்பதைப் பற்றி நாம் அறிய வேண்டும் அல்லவா?

இதற்கான வழிமுறைகளில் சில பின்வரும் வகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடைப்பிடிக்க முனைந்தால் வெற்றி கொள்ளலாம். பிள்ளையின் உயர்வில் நாமும் மகிழலாம். அவை பற்றிக் கீழே பார்ப்போம்.

அ. வீட்டில்

1. **அன்பையும் பாசத்தையும் காட்டுங்கள்.**

பிள்ளைகளிடம் ஆரம்பத்தில் இருந்தே இவற்றைச் செயற்படுத்த வேண்டும். பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் தொடர்ச்சியாக இருந்தால் அவர்களின் ஆழ்மனத்தில் "என்னை நேசிக்கும் தகுதிவாய்ந்த பெற்றோர் எனக்கு உள்ளனர்" என்ற உணர்வை ஏற்படுத்தி உங்களில் அதே அன்பை வழங்குவர்.

2. **உங்கள் பிள்ளையிடம் வாழ்த்து அல்லது பாராட்டுச் சொல்லுங்கள்**

உங்கள் பிள்ளை சரியான எதையாவது செய்யும் போதெல்லாம் பாராட்டுங்கள். உதாரணம்: "உன் நண்பனுக்குப் படிக்க உதவி செய்ததைப் பார்த்தேன். நான் உன்னைப்பற்றிப் பெருமைப்படுகின்றேன்". "நீ மிகவும் விசேடமானவள்/ன்". "நீ அந்த வழியில் செய்ததை நான் விரும்புகின்றேன்".

3. **உங்கள் பாராட்டுக்களை நம்பகத்தன்மை உள்ளதாக்குங்கள்.**

இது மிகவும் முக்கியமானது. மிகைப்படுத்தப்பட்ட பாராட்டுக்களைத் தவிருங்கள். ஏனெனில் அது எதிர் விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடும். உதாரணம் "நீயே இந்த உலகில் மிகச் சிறந்தவன்/ள்" இதுவரை வாழ்ந்தவர்களில் நீயே மிகவும் நல்லவன்" இவ்வகையான மிகைப்படுத்தல்களினால் குழந்தைகளிடத்தில் வீண் பெருமிதம் உருவாக வாய்ப்பு ஏற்படும். இது நீண்டகாலத்தில் எதிர்மறை விளைவை ஏற்படுத்தி, அவர்களது சுயமரியாதையைப் பாதிக்கக்கூடும். இதனால், நண்பர்களுடனான உறவும் பாதிக்கக் கூடும்.

4. **பிள்ளைகளுக்கான இலக்குகளை முன்வையுங்கள்.**

பிள்ளை தானாகவே தனது அடுத்த இலக்கை அடைந்து, தனது அடையாளத்தை நிலைநாட்டுவதற்குச் சில சோதனைகளை முன்வையுங்கள். பிள்ளையின் வயது, திறன்களுக்குப் பொருத்தமாக இந்த இலக்கு அமைக்கப்பட வேண்டும். மிகவும் பொருத்தமானதாக இவை அமைய வேண்டும். பிள்ளை இலக்கை நோக்கி வேலைசெய்யும் ஒவ்வொரு தருணத்திலும், உடனிருந்து ஊக்குவிக்கவும், அவரது வெற்றித் தருணங்களில் பாராட்டவும் வேண்டும். இலக்கை அடைவதற்கான சாதனையில் கிடைக்கின்ற பாராட்டுக்களும், ஊக்குவிப்பும் பிள்ளையின் சுயவிம்பத்தை வலுப்படுத்தும்.

5. **நபரை விடுத்து அவரின் செயலை விமர்சியுங்கள்.**

எப்போதாவது பிள்ளை ஏதாவது எதிர்மறையான விடயத்தைச் செய்தால், அவரிடம் சொல்லுங்கள். "நீங்கள் அப்படி ஒரு நல்ல சிறப்பான பிள்ளை. இதுபோன்ற நடவடிக்கையைச் செய்யக் கூடாது". என அவரின் செயலை விமர்சிக்கலாம். பதிலாக "நீ ஒரு கெட்ட பிள்ளை" என நபரை விமர்சிக்க வேண்டாம். இச்செயலானது, அவரது சுயவிம்பத்தை உடைத்துவிடும்.

6. **உங்கள் பிள்ளையின் உணர்வுகளை மதிப்பிடுங்கள்.**

பிள்ளை தனது சுயமரியதையின் பின்னணியில் துன்பப்பட்டால், அதனை உற்றுக் கவனியுங்கள். உணர்வுகளை மதிப்பிடுவதற்கு அது முக்கியமாகும். உதாரணமாக, தனது நண்பர் அல்லது ஆசிரியரினால் கூறப்பட்ட ஒரு புண்படுத்தும் கருத்து மூலமாகப் பிள்ளை எரிச்சலுற்று வந்தால், நீங்கள் சொல்லும் பதிலின் தன்மையைப் பொறுத்துத் திருப்தியும், அதிருப்தியும் அடையக் கூடும். "உனது உணர்வு எனக்குப் புரிகின்றது. உனது நண்பர் என்ன சொன்னார், என்பதை அறிய விரும்புகின்றேன்". என்று கூறலாம். அல்லது "உண்மையில் அவர் அடிக்கடி உன்னைக் காயப்படுத்துகின்றதைப் பார்க்கும் போது, உனது செயல் எதுவோ... அவருக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகின்றது". எனப் பதிலளிப்பதற்கான உந்துதலைக் கொடுக்கலாம். இவ்வாறு அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்துப் பேசுகின்ற போது. பிள்ளை உங்களிடம் மனம் திறந்து கதைப்பதற்கு முன்வரும். நீங்கள் மற்றவர்கள் சொன்ன சாதகமான விடயங்கள் மற்றும், நேர்மறையான விடயங்களையும் அதனுடன் இணைந்த உணர்வுகளையும், மீளவும் சுட்டிக்காட்டி சுய ஊக்கம் பெறுவதற்கு வழிப்படுத்த முடியும்.

**7. உங்கள் பிள்ளை தொடர்பாகப் பெருமைப்படுங்கள்.**

ஒரு வழக்கமான அடிப்படையில் "உன்னைப் பிளைள்ளையாகப் பெற்றதில் எவ்வளவு அதிஷ்டசாலி அல்லது பெருமைப்படுகின்றோம்" என்பதைப் பிள்ளையிடம் சொல்லிக் கொள்ளுங்கள். இவ்வாறு கூறிக்கொள்வதனால் பிள்ளையிடம் சுயமரியாதையின் அளவு அதிகரிக்கும். தன்மீது நம்பிக்கை கொள்ளும்.

**8. உங்கள் பிள்ளை பற்றிச் சாதகமாகப் பேசுங்கள்.**

பிள்ளையின் வாழ்வில் முக்கியமானவர்களான தாத்தா, பாட்டி, ஆசிரியர்கள், நண்பர்கள் முன்னிலையில் உங்கள் பிள்ளை பற்றி நேர்மறையான கருத்துக்களைப் பேசுங்கள். "மிக அழகாகக் படம் வரைந்திருக்கிறான்/ள்", என்ன முடிவெடுப்பது?... எனக் குழப்பத்தில் இருந்த எனக்கு, மிகச் சரியாக முடிவை எடுத்துக் கொடுத்தவன்/ள் என் மகன்/ள் தான். தீர்மானம் எடுக்கக் கூடியவன்/ள்". இவ்வாறான கூற்றுக்கள் பிள்ளையின் சுயமரியாதைக் கணக்கை வலுப்படுத்தும்.

**9. உங்கள் பிள்ளையைப் பிறருடன் ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.**

ஒருபோதும் உங்கள் பிள்ளையை வேறொருவருடன் ஒப்பிட்டுப் போசாதீர்கள். உதாரணம் "ஏன் நீ ரவி போல இல்லை? அவன் எவ்வளவு கெட்டிக்காரன்" இத்தகைய ஒப்புமைகள் உங்கள் பிள்ளையின் சுயமரியாதையைத் தொலைத்துவிடும். மற்றவர்கள் சிறப்பாகச் செய்யும் போது, "அவர் தனது வழியில் செய்கின்றார். உனக்கென்று ஒரு வழி உண்டு. உனது சொந்த வழியில் செய்யும் போது, நீ சிறப்பானவன்" என்று உங்கள் பிள்ளைக்குச் சொல்லுங்கள். உங்கள் பிள்ளையின் தவறுகளை அவனின் அல்லது அவளின் முந்தைய செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுக் கூறலாம். உதாரணம்: "சென்றமுறை இந்தப்பகுதியைச் சிறப்பாகச் செய்திருந்தாய், ஆனால், இப்போது தவறு வந்துள்ளது. அது பற்றிச் சொல்வாயா?" இவ்வாறு கேட்டு அதற்கான காரணங்களை அறிந்து, தீர்ப்பதற்கு வழியமைத்துக் கொடுங்கள்.

**10. உங்கள் பிள்ளையைக் கையாளுவதில் வேறு நபர்களிலும் பார்க்க உங்களுக்குப் பலம் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்**

பாடசாலையில் சேர்ந்த ஆரம்பத்திலேயே வகுப்பாசிரியரிடத்தில், உங்கள் பிள்ளையிடம் உள்ள சிறப்பான பலமிக்க பகுதி எது? என்பது பற்றியும், அவன் அல்லது அவள் எதில் மேம்பட்டுள்ளார்? என்பது தொடர்பாகவும் பேசுங்கள்.

இதனால், உங்கள் பிள்ளை தொடர்பான நேர்மறையான பார்வையை வகுப்பாசிரியர் பெறுவதோடு, அவர்களின் பலத்தை மேலும் மேம்பாடுடையதாக ஆக்குவதற்கு வழிப்படுத்தவும் அவர்களுக்கு உதவும்.

**11. நீங்கள், வழக்கமான அடிப்படையில் "நான் உன்னை நிபந்தனையின்றி நேசிக்கின்றேன்" என்பதைப் பிள்ளையிடம் சொல்லுங்கள்.**

அவர்கள் தோல்வியடையும் போது அல்லது, தவறு செய்யும் போது, "நீ எனக்கு சிறப்பானவன்/ள், நான் எப்பொழுதும் உன்னை நேசிக்கின்றேன். என்ன விஷயம்?" என்று அவர்களிடம் சொல்லிக் கேட்பதற்கு நினைவில் வைத்திருங்கள். இவ்வாறு செய்வதனால் நீங்கள் எப்போதும் அவர்களது "அருகிருந்து, அவர்களது உணர்வு மற்றும் எண்ணங்களில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாய் அறிந்து கொள்ளுகின்ற பெற்றோர் எனக்கு இருக்கின்றார்கள்" என்ற செய்தியை அவர்களுக்குக் கொடுக்கும். இவ்வாறில்லாமல், "நீ இது செய்தால்தான், கேட்டதைத் தருவேன்" என்ற நிபந்தனைப்படுத்தல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இச்செயல் உங்களிடமிருந்து பிள்ளையைச் சிறிது விலக்கி வைத்துவிடும்.

**12. உங்கள் சொந்த சுயமரியாதையைக் கொள்ள முனையுங்கள்.**

நீங்கள் ஒரு நேர்மறையான விதத்தில் உங்களைப் பார்க்க வேண்டும். தமது சுயமரியாதையைப் பார்க்க முடியாத பெற்றோர்கள், பிள்ளையிடம் அதனை வளர்க்க முடியாது. மதிப்பு மற்றும் சுயமரியாதை, நேர்மறையான எண்ணங்கள் இருக்கும் பெற்றோரே தமது பிள்ளையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவ முடியும்.

ஆ. பாடசாலையில்,

பெற்றோரே நீங்கள், உமது பிள்ளையின் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டு அவர்களின் சுயமரியாதையை மேம்படுத்துவதற்குப் பின்வரும் விடயங்கள் உங்களுக்கு உதவும்.

**1. பிள்ளையின் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியருக்கு உதவியாகவும் பிள்ளைக்கு ஆதரவாகவும் செயற்படுங்கள்.**

உங்களிடம் இருக்கின்ற ஆற்றல், மற்றும் திறன்களின் அடிப்படையில் ஆசிரியருக்கான கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிப்பதற்கும். பாடசாலை விழாக்கள், போட்டிகள், சமய கலாசார நிகழ்வுகள், மற்றும் சமூகத் தொடர்பாடல்

வைபவங்கள் போன்றவற்றில் பங்கெடுப்பதற்கும் பாடசாலைக்கு அடிக்கடி செல்ல முடியும். இது உங்களது பிள்ளை தொடர்பான நேர்மனப்பாங்கைப் பாடசாலைச் சமூகத்தில் கட்டியெழுப்புவதற்கு உதவும்.

2. **வீட்டில் பிள்ளையின் கற்றலை ஊக்குவித்தலுக்காக, உங்களின் திறன்களை வளருங்கள்.**

பாடசாலையில் செயற்படுத்தப்படுகின்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் பங்குபற்றி, உங்கள் அறிவை வளர்த்தெடுங்கள். போட்டி நிகழ்வுகளில் ஈடுபட்டு உங்கள் திறனை வெளிப்படுத்தி, அதற்குரிய மதிப்பை வென்றெடுங்கள். உங்கள் வசமிருக்கும் ஆற்றல்களின் மூலம், பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளில் பக்கபலமாக இருந்து, அவர்களை ஊக்குவிப்பதற்குத் தூண்டியாய் இருங்கள். உதாரணம்: இசைக்கருவிகளை வாசித்தல், அலங்கரித்தல்,

3. **ஆசிரியர், அதிபருடன் இணைந்து பிள்ளைகளின் நடத்தை மேம்பாட்டு வழிமுறைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துங்கள்.**

பிள்ளைகள், வீட்டிலும் பாடசாலையிலும் செயற்படுத்த வேண்டிய நடத்தையைப் பாடசாலைச் சமூகத்தினருடன் சேர்ந்து திட்டமிடுங்கள். அதன் இலக்கை மாணவருடன் பகிர்ந்து கொண்டு. அவற்றை அவர்கள் செயற்படுத்துவதற்கு ஆதரவளியுங்கள். திட்டமிட்டபடி சிறப்பாகச் செயற்படும் மாணவருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நடத்தைசார் வெகுமதி அளியுங்கள்.

4. **பாடசாலையில் பிரத்தியேக பிரச்சினைகளுக்காகக் கூட்டப்படும், மேலதிக பெற்றோர் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்.**

பாடசாலை என்பது சமூகத்தின் ஓர் அங்கமாகும். உங்கள் பிள்ளைகளே அங்கு முதலீடு செய்யப்பட்டவர்கள். அவர்களைப் பயன்மிக்க அம்சமாகச் சமூகத்துக்குக் கையளிப்பதற்கு ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டியது மிக அவசியமாகும். அங்கு தோன்றுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெற்றோரின் ஆதரவு மிகவும் அவசியமாகும். எனவே, பாடசாலையிலிருந்து கூட்டத்துக்கான அழைப்புக் கிடைத்ததும் பிள்ளையின் தந்தை அல்லது தாய் அங்கு பிரசன்னமாயிருத்தல் அவசியமாகும். உங்களது பார்வையில் "இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாம்?" என்ற கருத்துக்களைப் பரிமாறுவதும், செயற்படுத்துவதும் நற்பெறுபேற்றைத் தரும். அத்துடன், மாணவர்களின் நல்ல நடத்தைகளை அறிவிப்பதற்காகவும்,

மாணவர்களுக்கான சுய ஒழுங்குபடுத்தற் தந்திரோபாயங்களைப் அறிமுகப்படுத்துவதற்காகவும் நீங்கள் அழைக்கப்படலாம். ஈது பெருமைப்படக் கூடிய விடயம் அல்லவா?

5. **வீட்டில் செயற்படவேண்டிய விசேடமான செயன்முறைக்கான கருத்துப்பகிர்வில் ஈடுபடுங்கள்.**

உங்கள் பிள்ளையின் கல்வி முன்னேற்றம் கருதியும். பிள்ளையின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும், வீட்டில் எவற்றைச் செய்தால் நல்லது. போன்ற இன்னோரன்ன வழிமுறைகளையும் தெரியப்படுத்துவதற்காக, வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உங்களைப் பாடசாலைக்கு அழைக்கக் கூடும். அவ்வேளையில் தவறாமல் சென்று, ஆசிரியர்களிடம் அல்லது அங்கு வருகின்ற பெரியோர்களிடம் அவர்கள் கூறும் உத்திகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இவ்வாறு செயற்படுவதனால் பெற்றோர், ஆசிரியர் உறவு மேலும் விருத்தியடையும். உங்கள் பிள்ளையின் மதிப்பும் உயரும்.

6. **தொடர்பாடலுக்காகப் பாடசாலையிலிருந்து வரும் கடிதங்கள், கையேடுகளுக்குப் பதிலளியுங்கள்.**

உங்கள் பிள்ளையின் உடல் உளநலன், கற்றலில் உயர்ச்சி அல்லது வீழ்ச்சி, மேலதிகக்கற்றல், கல்விச்சுற்றுலா, கண்காட்சி, போட்டிகள், விழாக்கள், வைபவங்கள், பௌதீகத் தேவைகள், போன்ற பல விடயங்கள் தொடர்பாகவும் பாடசாலையிலிருந்து இவை வரக்கூடும். பிள்ளையின் தவறான நடத்தையை அறிவிப்பதற்காகவும் பெற்றோரை அழைப்பர். அவ்வேளைகளில் அவற்றை வாசித்து உங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்வதும், பொருளாதார ரீதியாக உதவ முடியாதெனின் சரீர உதவியாவது செய்வதும், பிள்ளையின் நடத்தை மாற்றம் கருதி உடன் பங்கடுத்து கருத்தாடலில் ஈடுபடுவதும் நல்லது.

அத்துடன், பிள்ளைகளின் சாதகமான. நேரான, மகிழ்ச்சியான நடத்தைகளை அறிவிப்பதற்காகவும் வீட்டுக்குறிப்புகளை அனுப்புவர். அவ்வேளைகளில் அவற்றை ஏற்றுக் கொண்டு, உங்கள் பிள்ளையைப் பாராட்டித் தட்டிக் கொடுப்பது, அவர்களின் சுயமரியாதையை உயர்த்தும் செயலாக உருவெடுக்கும்.

7. **கலாசாரப் பாரம்பரியக் கதைகளை வகுப்பறையில் பகிர்தல்.**

உங்களுக்குத் தெரிந்த பாரம்பரியக் கதைகளை மாணவருக்கு எடுத்துக் கூறுவதற்குத் தயங்காதீர்கள். அதிபர், ஆசிரியர்களின் அழைப்பை ஏற்று இவற்றைச் செய்ய முடியும். இதுவும் உங்களால் இயன்ற மிகச் சிறந்த பங்களிப்பாகும்.

8. **வீட்டுத் தரிசிப்பை ஏற்றுக் கொள்ளல்.**

ஆசிரியர் குழாமோ, அல்லது ஒரு ஆசிரியரோ உங்கள் வீட்டுத் தரிசிப்பை மேற்கொள்ள வேண்டி ஏற்படும். அத்தரிசிப்பானது உங்கள் பிள்ளையின் நலன்கருதியதாகவே இருக்கும். மாணவர்களின் விருப்புத் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு, அல்லது குடும்ப நிலை தொடர்பாக ஆராய்வதற்கு, வருகை தராமல் இருக்கும் காரணத்தை அறிவதற்கு எனப் பலவாறாக இத்தரிசிப்பு அமையலாம். அவ்வேளைகளில், அவர்களை வரவேற்றுக் கருத்துக்களைப் பகிர்ந்து ஆதரவளிப்பதும், உரிய பதிலளிப்பதும் நன்மையைத் தரும். எனவே, தயக்கமின்றி இச்செயற்பாட்டில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்துக்கு இவை யாவும் முக்கியமான செயற்பாடுகளாகும்.

எனவே, பிள்ளையின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் முக்கிய அம்சமாக விளங்கும் சுயமரியாதை எனும் வங்கிக் கணக்கை உயர்த்துவதற்கு பெற்றோராகிய நீங்கள் என்ன செய்யலாம்? சிந்தனைக் கிளறல் தோன்றியுள்ளதா?

அவ்வாறெனின், நீங்கள் எவ்வகையான பெற்றோர் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்களால் முடிந்த நடத்தை மாற்று உத்திகளைக் கையாளுங்கள். பிள்ளையின் கற்றலுக்கும், சிறந்த பழக்க வழக்கத்தைக் கைக்கொள்ளவும், நாளாந்த செயற்பாடு, விருப்புக்கேற்ற பாடத்தைத் தெரிந்து கற்பதற்கும், எதிர்கால வாழ்வுக்கும், மற்றும் தொழிலொன்றைத் தெரிவு செய்வதற்கும் உங்களால் இயன்ற ஊக்கத்தையும், உத்வேகத்தையும். பாராட்டுக்களையும், நல்கி உன்னதமானவர்கள் ஆக்குவதற்கு உதவுங்கள். உங்களதும் பிள்ளையினதும் சுயமரியாதைக் கணக்கின் வரவை உயர்த்தி பெருமை சேருங்கள். முயன்றுதான் பாருங்களேன். உங்களால் முடியும்.


செல்வி. உதயகலா சிவபாதசுந்தரம்
உதவி முகாமையாளர்,
மாகாண உளசமூக வளநிலையம்,
வடமாகாணம்.

# பரிசில் பெறுவோர் விபரம்

| | | | | பா.ம |
|---|---|---|---|---|
| | தரம் - 1 (2016) | | | |
| 01. | க. ஐங்கரன் | - | கோலம் போடுதல் | 1ம் இடம் |
| | | | பேச்சு | 2ம் இடம் |
| 02. | தி. டில்க்ஷன் | - | பாமாலை மனனம் | 2ம் இடம் |
| | | | கோலம் போடுதல் | 3ம் இடம் |
| 03. | ச. கிருத்திகன் | - | மாலை கட்டுதல் | 1ம் இடம் |
| 04. | சி. தர்சிகா- | - | தோரணம் கட்டுதல் | 1ம் இடம் |
| | | | மாலை கட்டுதல் | 2ம் இடம் |
| 05. | க. அபிசாலினி | - | கோலம் போடுதல் | 2ம் இடம் |
| | | | மாலை கட்டுதல் | 3ம் இடம் |
| | | | தோரணம் கட்டுதல் | 3ம் இடம் |
| 06. | சி. பவ்வியா | - | தோரணம் கட்டுதல் | 2ம் இடம் |
| | | | பாமாலை மனனம் | 3ம் இடம் |
| 07. | ப. சகானா | - | பேச்சு | 1ம் இடம் |
| | | - | பாமாலை மனனம் | 2ம் இடம் |
| | தரம் - 2 | | | |
| 08. | சி. அபிசாந் | - | வாய்ப்பாடு மனனம் | 2ம் இடம் |
| | | | திருக்குறள் மனனம் | 2ம் இடம் |
| | | | சித்திரம் | 2ம் இடம் |
| | | | பேச்சு | 1ம் இடம் |
| | | | மாலை கட்டுதல் | 1ம் இடம் |
| | | | பாமாலை மனனம் | 2ம் இடம் |
| | | | கோலம் போடுதல் | 2ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல். | | | |
| 09. | வி. ஆர்சன் | - | திருக்குறள் மனனம் | 1ம் இடம் |
| | | | தோரணம் கட்டுதல் | 3ம் இடம் |
| | | | பாமாலை மனனம் | 1ம் இடம் |
| | | | பேச்சு | 2ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல். | | | |
| 10. | சி. நிதுஷன் | - | திருக்குறள் மனனம் | 2ம் இடம் |
| | | | தோரணம் கட்டுதல் | 2ம் இடம் |
| | | | பேச்சு | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல். | | | |

| | | பா.ம |
|---|---|---|
| 11. | மோ. பானுசன் - தோரணம் கட்டுதல் | 1ம் இடம் |
| 12. | மோ. பதுசன் - கோலம் போடுதல் | 1ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: கணிதம். | |
| 13. | பி. விருத்திகா - வாய்ப்பாடு மனனம் | 1ம் இடம் |
| | சித்திரம் | 1ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 2ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: தமிழ். | |
| 14. | கி. கினோசா - வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 3ம் இடம் |
| | கோலம் போடுதல் | 3ம் இடம் |
| | பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: சுற்றாடல். | |
| | தரம் - 3 | |
| 15. | ம. சங்கீதனன் - வாய்பாடு மனனம் | 1ம் இடம் |
| | சித்திரம் | 1ம் இடம் |
| | துரித கணிதம் | 1ம் இடம் |
| | கோலம் போடுதல் | 1ம் இடம் |
| | பாமாலை மனனம் | 1ம் இடம் |
| | தோரணம் கட்டுதல் | 1ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல். | |
| 16. | ம. கபில்ராஜ் - துரித கணிதம் | 2ம் இடம் |
| | பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | கோலம் போடுதல் | 2ம் இடம் |
| | தோரணம் கட்டுதல் | 2ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், கணிதம். | |
| 17. | ச. சிவகஜன் - தோரணம் கட்டுதல் | 1ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 1ம் இடம் |
| | பேச்சு | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: கணிதம். | |
| 18. | செ. நிதுஷா - வாய்பாடு மனனம் | 2ம் இடம் |
| | துரித கணிதம் | 3ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 2ம் இடம் |
| | கோலம் போடுதல் | 3ம் இடம் |

| | | பா.ம |
|---|---|---|
| | பாமாலை மனனம் | 2ம் இடம் |
| | பேச்சு | 1ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: | |
| | தமிழ், கணிதம், சுற்றாடல். | |
| 19. | க. பவிஷா - வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் |
| | பேச்சு | 2ம் இடம் |
| 20. | சிவனொளி | |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: | |
| | சமயம், தமிழ், சுற்றாடல். | |
| | **தரம் - 4** | |
| 21. | கே. தக்ஷிகன் - வாய்ப்பாடு மனனம் | 1ம் இடம் |
| | பேச்சு | 1ம் இடம் |
| | பாமாலை மனனம் | 1ம் இடம் |
| | துரித கணிதம் | 3ம் இடம் |
| | சித்திரம் | 2ம் இடம் |
| | கோலம் போடுதல் | 2ம் இடம் |
| | தோரணம் கட்டுதல் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: | |
| | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம். | |
| 22. | அ. தமிழ்மாறன் - வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் |
| | திருக்குறள் மனனம் | 1ம் இடம் |
| | கோலம் போடுதல் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சித்திரம், ஆங்கிலம். | |
| 23. | ச. பரநிதன் - பாமாலை மனனம் | 2ம் இடம் |
| 24. | ர. லக்ஷன் - பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | பேச்சு | 3ம் இடம் |
| 25. | வி. மிதுஷா - வாய்ப்பாடு மனனம் | 2ம் இடம் |
| | திருக்குறள் மனனம் | 2ம் இடம் |
| | சித்திரம் | 1ம் இடம் |
| | துரித கணிதம் | 1ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 1ம் இடம் |
| | தோரணம் கட்டுதல் | |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: | |
| | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம். | |

| | | பா.ம |
|---|---|---|
| 26. | கே. டிசானிக்கா - வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் |
| | துரித கணிதம் | 3ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், கணிதம், ஆங்கிலம். | |
| 27. | மு. லவ்ற்றிகா - பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | மாலை கட்டுதல் | 2ம் இடம் |
| | பேச்சு | 2ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: தமிழ். | |
| 28. | கி. கிருஸ்ணவதி - தோரணம் கட்டுதல் | 1ம் இடம் |
| 29. | ப. லத்திகா - கோலம் போடுதல் | 1ம் இடம் |
| | **தரம் - 5** | |
| 30. | ம. காருண்யன் - வாய்ப்பாடு மனனம் | 2ம் இடம் |
| | துரித கணிதம் | 1ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: தமிழ், கணிதம், ஆங்கிலம். | |
| 31. | ஜெ. நிலக்ஷன் - பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடம்: சமயம். | |
| 32. | ர. விலந்தன் - சித்திரம் | 1ம் இடம் |
| 33. | பா. தரணி - மாலை கட்டுதல் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: கணிதம், சுற்றாடல். | |
| 34. | அ. லோசன் - உயர்புள்ளி பெற்ற பாடம்: சமயம். | |
| 35. | வி. ஆதிரை - வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் |
| | துரித கணிதம் | 3ம் இடம் |
| | பாமாலை மனனம் | 3ம் இடம் |
| | உயர்புள்ளி பெற்ற பாடங்கள்: சமயம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம். | |
| 36. | பா. நிருபாஜினி - வாய்ப்பாடு மனனம் | 1ம் இடம் |
| | திருக்குறள் மனனம் | 1ம் இடம் |
| | பாமாலை மனனம் | 2ம் இடம் |
| | பேச்சு | 2ம் இடம். |

| | | பா.ம |
|---|---|---|
| 37. | லோ. யசிந்தா<br>உயர்புள்ளி பெற்ற பாடங்கள்:<br>சமயம், தமிழ், கணிதம், ,சுற்றாடல், ஆங்கிலம். | |
| 38. | சு. விதுரா<br>தோரணம் கட்டுதல் | <br>1ம் இடம் |
| 39. | மோ. தனுசிகா<br>தோரணம் கட்டுதல்<br>மாலை கட்டுதல்<br>கோலம் போடுதல்<br>பாமாலை மனனம்<br>பேச்சு<br>Coppy Writing<br>Dictation | <br>3ம் இடம்<br>1ம் இடம்<br>2ம் இடம்<br>1ம் இடம்<br>1ம் இடம்<br>1ம் இடம்<br>2ம் இடம் |
| 40. | க. சதுர்த்திகா<br>தோரணம் கட்டுதல்<br>மாலை கட்டுதல்<br>கோலம் போடுதல்<br>பேச்சு | <br>2ம் இடம்<br>2ம் இடம்<br>1ம் இடம்<br>3ம் இடம |
| 41. | 2015 தரம் - 5<br>கே. லேக்கா Coppy Writing<br>Dictation<br>உயர்புள்ளி பெற்ற பாடங்கள்:<br>ஆங்கிலம், தமிழ், கணிதம், சுற்றாடல்,<br>சமயம். | <br>1ம் இடம்<br>2ம் இடம் |
| 42. | உ. தட்சாயினி<br>உயர்புள்ளி பெற்ற பாடங்கள்:<br>தமிழ் கணிதம், சுற்றாடல், சமயம் | |
| 43. | அபினயா<br>உயர்புள்ளி பெற்ற பாடங்கள்:<br>கணிதம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், சமயம். | |

# யா/ ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை
## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | ர. லிலந்தன் | - 136 | 9) | த. தனுசன் | - 100 |
| 2) | பா. தரணி | - 134 | 10) | அ. லோசன் | - 100 |
| 3) | லோ. யசிந்தா | - 131 | 11) | ஐ. தர்சிகா | - 95 |
| 4) | ம. காருண்யன் | - 129 | 12) | சு. விதுரா | - 90 |
| 5) | மோ. தனுசிகா | - 117 | 13) | பி. விஸ்ணுவி | - 88 |
| 6) | ஜெ. நிலக்சன் | - 112 | 14) | வி. விநோத் | - 85 |
| 7) | பா. நிருபாஜினி | - 111 | 15) | க. சதுர்த்திகா | - 83 |
| 8) | வி. ஆதிரை | - 107 | 16) | மோ. ரினுசா | - 80 |

| | |
|---|---|
| விண்ணப்பித்தோர் | - 17 |
| தோற்றியோர் | - 17 |
| 70 புள்ளிகளுக்கு மேல் | - 94% |

### வரவொழுங்கு - 2015
தரம் 1 - வி. ஆர்சன்
தரம் 2 - இ. திவானுஜா
தரம் 3 - அ. தமிழ்மாறன்
தரம் 4 - சு. விதுரா
தரம் 5 - உ. தட்ஷாயினி

### நல்மாணாக்கர் - 2015
1) ச. சங்கீதன்
2) கே. லேக்கா

### சிறந்த விளையாட்டு வீர வீராங்கனை
1) கோ. சஞ்சுகாந்
2) கே. லேக்கா

# பாடசாலைக்கீதம்

பள்ளியின் பெயரைச் சொல்ல சொல்ல
பரவசம் வந்தெமை ஆளும்
துள்ளியே பயிலும் மாணவர் நாமும்
தொடுவோம் உயர்வினை நாளும்

செந்தமிழ் வல்லார் வாழ்ந்திடும் பூமி
செல்வம் சிறக்கும் செம்மண் பூமி
வந்தநல் வல்லார் அமைத்த ஏழாலை
அமெரிக்கன் பாடசாலை வாழி

கல்வியும் கலையும் இங்கு வளருது
காவலாய் பெரியோர் ஆசியும் பெருகுது
நல்ல இரு மதங்கள் நாளுமே பேணி
நற்பண்பென்றும் வளர்த்தாய் வாழி

வாழிய எங்கள் பாடசாலை
வளம் பல பெற்று வாழியவே
ஆழிசூழ் உலகம் போற்றிட என்றும்
அன்னை வாழி வாழியவே.

ஆக்கம்

கலாபூஷணம் திரு. சு. துரைசிங்கம்
(கவிஞர் துரையர்)

Krishna Printers Chunnakam - 021 224 2475